செ.வெ. எண்: 714 நாள்: 02.12.2011

# பத்திரிக்கை செய்தி

## வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் பணிகள் குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு செ. தாமோதரன் அவர்கள் ஆய்வு

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு செ. தாமோதரன் அவர்கள் 02.12.2011 அன்று முற்பகல் 11.00 மணியளவில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை பணிகள் குறித்து, சென்னை, கிண்டியில் உள்ள தலைமை அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் திரு சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் திரு தங்க கலியபெருமாள், இ.ஆ.ப., மற்றும் துறையின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். ஆய்வின்போது அத்துறையின் அதிகாரிகளின் கருத்துக்களை கேட்டறிந்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் **அம்மா** அவர்களின் ஆலோசனையின்படி வேளாண் உற்பத்தியை இருமடங்காக பெருக்கவும், விவசாயிகளின் வருமானத்தை மூன்று மடங்காக அதிகரிக்கவும் துறையினர் உறுதுணையாக இருக்க வேண்டும் எனவும், இத்துறையின் அலுவலர்கள் வெளி சந்தையின் விவரங்களையும் சந்தையின் எதிர்காலம் மற்றும் நிகழ்கால விலை விவரங்களை புலனாய்வு செய்து விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மேலும் விவசாயிகள் ‘‘சந்தை சார்ந்த விவசாயம்’’ செய்ய துறையினர் ஆலோசனை வழங்குவதோடு நில்லாமல் அறுவடைக்கு பின் உள்ள தொழில்நுட்பம் மற்றும் மதிப்பு கூட்டிய விளைபொருட்களை தயார் செய்து அவர்களது திறனை வளர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

இதன் மூலம் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும் அதன் மூலம் விவசாயிகள் வருமானத்தை பெருக்கவும் வழி வகுக்கும் என மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்தார்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**